**ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கான மின்கட்டணம் செலுத்துதல் – கல்வித்துறை மூலம் செலுத்த அனுமதி அளித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு.**

---

பள்ளிக் கல்வி (எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண் 146 நாள்.04.07.2008

சர்வதாரி, ஆனி 20

திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டவை:–

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.11240/சி1/2008, நாள் 9.5.2008

**ஆணை:**

தொடக்கக் கல்வி இயக்குநர், படிக்கப்பட்ட தனது கடிதத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்படும் மின்கட்டணங்கள் இதுநாள் வரையில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தே செலுத்தப்பட்டு வந்தது எனவும் தற்சமயம் மேற்படி மின்கட்டணங்களை கல்வித் துறையின் மூலமாகவே செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், தற்பொழுது 31.03.2008 முடிய மின் கட்டணம் செலுத்தத் தவறிய பள்ளிகள் சார்பில் தொகுக்கப்பட்ட தொகை ரூ.47,07,232/– (ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு மட்டும்) மின் கட்டணமாக தொடக்கக் கல்வித் துறையின் மூலம் செலுத்த வேண்டியுள்ளது எனவும், எனவே 31.03.2008 முடிய மின் கட்டணம் செலுத்தத் தவறிய பள்ளிகள் சார்பாக ரூ.47,07,232/– (ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு மட்டும்) மற்றும் 01.04.2008 முதல் 31.03.2009 முடிய உத்தேசிக்கப்பட்ட தொகை ரூ.2,50,00,000/–(ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) தொடக்கக் கல்வித் துறையின் மூலம் செலுத்தும் வகையில் அரசின் அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2) தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் எனக் கருதி, அவ்வாறே, 31.03.2008 முடிய மின் கட்டணம் செலுத்தத் தவறிய, இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பள்ளிகள் சார்பாக ரூ.47,07,232/– (ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு மட்டும்) மற்றும் 01.04.2008 முதல் 31.03.2009 முடிய மின்சார கட்டணமாக ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் செலுத்த வேண்டிய உத்தேசிக்கப்பட்ட தொகை ரூ.2,50,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) தொடக்கக் கல்வித் துறையின் மூலம் செலுத்த அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> **“2202 – பொதுக்கல்வி – 01 – தொடக்கக் கல்வி 800 – ஏனைய செலவு – I – திட்டத்தில் சேராதது – AY – ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு மின் கட்டணம் செலுத்துதல் – 05 – அலுவலகச் செலவுகள் – 03 – மின் கட்டணங்கள்”. (DPC – 2202 – 01 – 800 AY 0534.)**

4) மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பிற்கு தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை – 6 மதீப்பீடு, கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பள கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) இத்திட்டத்தால் ஏற்படும் கூடுதல் செலவினம் ‘‘புதுப்பணித்திட்டம்’’ (New Service) குறித்த செலவினமாகும். இச்செலவினம் 2008–09 ஆம் ஆண்டின் துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு மூலம் பெற்று தொடக்கத்தில் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பான உரிய ஆணைகள் (பிஜி–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து 2008–09 ஆம் ஆண்டிற்கு தேவையான தொகைக்கு முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய செயற்குறிப்பினை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இந்த ஆணையின் 2 நகலுடன் நிதி (பிஜி1) துறைக்கு அனுப்புமாறு இயக்குநர், தொடக்கக் கல்வி, சென்னை–6 கேட்டுக் கொள்ளப்படுகிறார். துணைமானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய முன்மொழிவுகளை அரசின் நிதித்துறைக்கு உரிய நேரத்தில் தவறாமல் அனுப்பி வைக்குமாறும் இயக்குநர், தொடக்கக் கல்வி, சென்னை – 6 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.40590/கல்விII/, நாள் 4.7.2008 மூலமாக பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.365 (முன்னூற்று அறுபத்து ஐந்து) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு செயலாளர்

(அரசாணை (நிலை) எண்.146 நாள் 04.07.2008)

இணைப்பு

மின்கட்டணம் செலுத்திய/செலுத்த வேண்டிய விவரம்

| வ. எண் | மாவட்டம் | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய | | |
|---|---|---|---|---|
| | | மின்கட்டணம் செலுத்திய தொகை | மின்கட்டணம் செலுத்த தவறிய தொகை | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | சென்னை | 0 | 0 | 0 |
| 2. | கோவை | 983289 | 96236 | 1079525 |
| 3. | கடலூர் | 809704 | 38045 | 847749 |
| 4. | தருமபுரி | 293705 | 767227 | 370432 |
| 5. | திண்டுக்கல் | 253352 | 462255 | 715607 |
| 6. | ஈரோடு | 1114980 | 270227 | 1385207 |
| 7. | காஞ்சிபுரம் | 874308 | 158207 | 1032515 |
| 8. | கரூர் | 270635 | 873958 | 1144593 |
| 9. | கிருஷ்ணகிரி | 375249 | 83632 | 458881 |
| 10. | மதுரை | 241783 | 3121 | 244904 |
| 11. | நாகப்பட்டினம் | 440900 | 50520 | 491420 |
| 12. | நாகர்கோயில் | 25000 | 0 | 25000 |
| 13. | நாமக்கல் | 401454 | 29287 | 430741 |
| 14. | நீலகிரி | 137807 | 0 | 137807 |
| 15. | பெரம்பலூர் | 727857 | 66511 | 794368 |
| 16. | புதுக்கோட்டை | 814958 | 566192 | 1381150 |
| 17. | இராமநாதபுரம் | 227701 | 5173 | 232874 |
| 18. | சேலம் | 837749 | 20512 | 858261 |
| 19. | சிவகங்கை | 588704 | 63841 | 652545 |
| 20. | தஞ்சாவூர் | 755568 | 349683 | 1105251 |
| 21. | தேனி | 259180 | 71385 | 330565 |
| 22. | திருச்சி | 540040 | 50704 | 590744 |
| 23. | திருநெல்வேலி | 116476 | 8067 | 124543 |
| 24. | திருவள்ளூர் | 349593 | 69202 | 418795 |
| 25. | திருவாரூர் | 666095 | 178737 | 844832 |
| 26. | திருவண்ணாமலை | 1173655 | 158185 | 1331840 |
| 27. | தூத்துக்குடி | 181896 | 203820 | 385716 |
| 28. | வேலூர் | 139921 | 75579 | 215500 |
| 29. | விழுப்புரம் | 1159924 | 433916 | 1593840 |
| 30. | விருதுநகர் | 625747 | 243510 | 869257 |
| மொத்தம் | | 15387230 | 4707232 | 20094462 |

**M.KUTRALINGAM**
SECRETARY TO GOVERNMENT